செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 23.07.2018

# செய்தி வெளியீடு
# தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : யூன் 2018


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 யூன் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2.5% ஆக கணக்கிடப்பட்டுள்ளது என தெரிவித்தார். 2018 மே மாதத்தில் பதிவாகிய பணவீக்கம் 2.1% ஆக இருந்தது. கடந்த நான்கு மாதங்களாக பணவீக்கம் 3.0% சதவீதத்துக்கும் குறைவாகவே காணப்பட்டிருந்தது. 2018 யூன் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 0.26%, 2.26% ஆக இருந்த அதேவேளை, 6.3% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 யூன் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 3.9%, 2.4% ஆக காணப்பட்டன.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 மே மாதத்தில் பதிவாகிய 124.3 இருந்து 2018 யூன் மாதத்தில் 126.5 ஆக அதிகரித்துள்ளது. இது, 2018 மே மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 யூன் மாதத்தில் 2.2 சுட்டெண் புள்ளிகள் அதாவது 1.8 சதவீத புள்ளிகள் அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 1.55% இனாலும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.26% இனாலும் அதிகரித்தமையேயாகும்.

உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் மரக்கறி, புதிய மீன், பச்சை மிளகாய், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், முட்டை, பால்மா, கருவாடு, இஞ்சி மற்றும் கோழி இறைச்சி என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதி தேங்காய், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், அரிசி, சீனி, அண்ணாசிப்பழம், கடலை மற்றும் மாம்பழம் என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 யூன் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘போக்குவரத்து’, ‘உணவகமும் ஹோட்டல்களும்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். எரிபொருள் விலைகள்(பெற்றோல், டீசல்) மற்றும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமையே ‘போக்குவரத்து’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்கு பிரதான காரணமாகும். இருப்பினும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் குறைவு பதிவாகியது. அதேநேரம், ‘சுகாதாரம்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ மற்றும் ‘கல்வி’ ஆகிய பிரிவுகளின் செலவுப் பெறுமதிகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |
| | மே | 124.3 | 1.1 | 2.1 |
| | யூன் | 126.5 | 1.8 | 2.5 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்